முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 திகதி முதல்**

**சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 திகதி வரை**

**(15.10.2023 ஞாயிறு முதல் 22.10.2023 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானத்தலைவனே முருகா
   ஞானிகள் படை உருவாக்கி
   ஞான உலகம்தனை நிறுவ
   ஞானதேசிகனாக வந்த வேலவா
2. வேலவனே உமை போற்றி
   வினவிட இந்தியா தமிழகத்தில்
   காலமதும் சோபகிருது தரிவை திங்கள்
   கணக்காய் எழுநான்கு திகதிமேலாக
3. ஆகவே துலைதிங்கள் பஞ்சதிகதி வரை
   அறியவே நடக்கும் வார நிகழ்வாக
   வகைபட வருங்கால பலன்குறித்த ஆசி
   வழங்குவேன் அகத்திய மகரிஷி யானும்
4. யானுரைக்க இந்தியா தமிழகம்
   உண்மை நிலை கொண்டுமே
   ஞானத்தலைமையாக மக்களிடை
   நம்பகத் தன்மை கண்டிட
5. கண்டிட பகட்டான வழிமுறையை
   கைவிட்டு எளிமைபட திட்டங்காண
   தொண்டனும் சாமானியனும் கூட
   தெரிவிப்பேன் இலகுவாய் பயன் அடைய

6. அடையும்படி ஆளுமை தனை
ஆசாபாச ஊழல் முறையின்றி
தடையற தருமஞான வகையாக
தன்னார்வத் தொண்டாகவே நடத்திட
7. நடத்திட மக்கள் அங்கீகரிக்கும்
ஞானத்தலைமையாகச் சிறந்து
தடையின்றி எக்காலமுமே
தரும ஆட்சியாகத் தொடர நேரும்
8. நேருமை கொண்ட செயல் வடிவம்
நீதியோடு கடைப்பிடித்தால்
பொருளை கொண்டு தேடுகின்ற
பொல்லாங்கான ஆட்சி முறை
9. ஆட்சி முறைகள் அகன்றுமேவி
அடக்கம் அமைதி தருமம்கூடிய
ஆட்சியாளர்களாக அடைந்து
அகிலம் வியக்க இந்தியா தமிழகம்
10. தமிழகம் வளர்ச்சி நிலைகண்டு
தலைவன் முருகன் ஏற்ற
நேமம் தருமம் நீதி நிறைந்த
ஞான ஆட்சியாக மாறுமப்பா
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 05ம் நாள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஞானத்தலைவனே முருகப்பெருமானே கலியுகத்திலிருந்து மக்களை மீட்க ஞானிகள் படைதனை உருவாக்கி ஞானஉலகம் படைத்திட அரங்கமகா

தேசிகராக அவதரித்திட்ட வேலவனே! முருகா! உம்மை போற்றியே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 05ம் நாள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே நிகழவிருக்கும் நிகழ்வுகளை அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூலாக வழங்குகிறேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா, தமிழகத்திலே தலைமைகள் மக்களின் அன்பை பெற்று ஞானத் தலைமையாகவும் மக்களிடத்து முழு நம்பிக்கையையும் பெற வேண்டுமாயின் அவரவரும் பகட்டான வழிமுறைகளை விட்டு விட்டு எளிமையுடன் நடந்து மக்களுக்கு நேரிடையாக பலன் அளிக்கக்கூடியதும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலும் ஏழை எளிய மக்களும், சாதாரண மக்களும் பயன் பெறும் வகையிலே திட்டங்களை வகுத்து ஆட்சி புரிவதோடு அவரவரின் ஆசாபாசங்களில் அகப்பட்டு ஊழல் செய்யாமல் தருமவான்களாக தர்மத்தின் வழியிலே நடப்பதுடன் மக்கள் நேசிக்கும் தன்னார்வ தொண்டர்களாகவும் நடந்து கொள்ள வேண்டுமப்பா.

இவ்விதமே செயல்பட்டால் நாட்டு மக்கள் அவர்களை அங்கீகரிப்பர். ஞானத்தலைமையாக சிறந்து விளங்குவார்கள், எக்காலத்திலும் தடை எதுவுமின்றி தரும ஆட்சியை நடத்தி சிறப்படைவார்கள்.

நேர்மையான செயல்பாடு, நீதியுடன் நடத்தல், பொருள் பற்றில்லாமல் பொதுநலம் மிக்க ஆட்சி முறை, அடக்கமும், அமைதியும் தருமமும் கூடிய ஆட்சியாளர்களாக அவர்கள் மாறி இந்த உலகமே வியக்குமாறு ஆட்சி செய்வர்.

உலக நாடுகள் இந்திய தேசத்தை போற்றும் வண்ணமே நல்ல வளர்ச்சியை இந்திய தேசம் அடைந்து முருகப்பெருமான் கூறும் நியமமும், தருமமும், நீதியும் நிறைந்த ஞான ஆட்சியாக மாறிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—